www.ecourtsindia.com

1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
O.S.No.449/2018

04.09.2024 வா.சா.1 திரு.ஆனந்தராஜ்
1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. தபசில் சொத்து என்ன சர்வே எண்ணில் உள்ளது என்றால் 283/1 எப்–ல் உள்ளது. அதில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று தெரியாது. எனது தாத்தாவிற்கு 45 செண்ட் பாத்தியம். நான் எவ்வளவு இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதில் பாதி 22.5 செண்ட்க்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த தபசில் சொத்திற்கு நான்கு மால் சொல்ல முடியுமா என்றால் கிழக்கே சுப்பிரமணியன் இடம் உள்ளது, மேற்கே புதூர் ரோடு உள்ளது, வடக்கே எனது தந்தையின் கையிருப்பு நிலம், தெற்கே வடக்கத்தி அம்மன் கோவில் உள்ளது. அந்த நான்கு பக்க எல்கையிலுள்ள நபர்கள் யாராவது எனகக்காக சாட்சியம் அளிப்பார்களா என்றால் கேட்டு பார்க்க வேண்டும்.
2. சேர்வைகாரன் சொத்து தான் தபசில் சொத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சேர்வைகாரன் பெயரில் பட்டா அல்லது தீர்வை ரசீது உள்ளதா என்றால்தெரியாது.சேர்வைகாரனின் இறப்பு சான்றிதழ் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சேர்வைகாரனின் தகப்பனார் பெயர் என்ன என்றால் புதியவன். சேர்வைகாரனுக்கு புதியவன் மூலம் தான் சொத்து கிடைத்தது என்று சொல்லுகிறேன் என்றால்சரிதான். புதியவன் பெயரில் பட்டா, தீர்வை உள்ளதா என்றால் தெரியாது. பத்திரம் என்னிடம் கொடுத்தார்கள். சேர்வைகாரனின் சகோதர, சகோதரிக்குள் புதியவனின் சொத்துக்களை பிரித்து கொண்டார்களா என்றால் தெரியாது. புதியவன், சேர்வைகாரன் பெயரில் பட்டா தீர்வை எப்போதும் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. எனது தந்தை பெயரில் இருந்தது, பின்னிட்டு ரத்து செய்யப்பட்டது.
3. முன்னர் பட்டா தீர்வை இருந்தது மற்றும் அதை ரத்து செய்தது அதற்கான

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL060007902018/truecopy/order-3.pdf

ஆவணங்கள் என் வசம் உள்ளதா என்றால் உள்ளது, தாக்கல் செய்துள்ளேன். தபசில் சொத்து தொடர்பாக பட்டா பாஸ் புக் சட்டப்படி மாவட்ட வருவாய் அலுவலரிடம் வழக்கு நடந்து எனது அப்பாவிற்கு தாவா சொத்தில் உரிமையில்லை என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் தெரியாது.

4. எனக்கு மேற்சொன்ன விவரங்கள் தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. சேர்வைகாரன் என்பவர் எனக்கு எவ்வித செட்டில்மெண்ட் ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றாலும் வா.சா.ஆ.1 மோசடியானது என்றாலும் சரியல்ல. வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

5. எனது செட்டில்மெண்ட்க்கு முன்னரே ஆனந்தராஜ் என்பவர் அந்த சொத்தை 1985 ல் கிரையம் பெற்றுள்ள நிலையில் எனது பெயருக்கு எவ்வாறு செட்டில்மெண்ட் செய்யப்பட்டது என்றால் அது போலி பத்திரம் ஆகும். வில்லங்க சான்றிதழில் அந்த பதிவு துலங்கவில்லை அசல் மூல ஆவணம் எங்கள் வசம் இருந்தது. எனவே செட்டில்மெண்ட் செய்யப்பட்டது. ஆனந்தராஜ் கிரையம் பெற்ற ஆவணத்தை வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். அந்த ஆவணம் மோசடி ஆவணம் என்று பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால்சரிதான். ஆனந்தராஜிடமிருந்து 1ம் பிரதிவாதி 20.10.1997 ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் தெரியாது. பின்னர் 1ம் பிரதிவாதியிடமிருந்து 3ம் பிரதிவாதி 02.02.2017 ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

6. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.9 வில்லங்க சான்றிதழில் அது துலங்கும் என்றால்சரிதான். 3ம் பிரதிவாதியை முதலில் வழக்கில் சேர்க்காமல் பின்னர் மனு செய்து தரப்பினராக சேர்த்துள்ளேன்என்றால்சரிதான். சேர்க்க

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL060007902018/truecopy/order-3.pdf

www.ecourtsindia.com

சொன்னதால் சேர்த்தேன். தற்போது 3ம் பிரதிவாதி பெயரில் தான் தனி பட்டா தீர்வை உள்ளது என்றால் தெரியாது. நான் வா.சா.ஆ.6 ஆவணத்தின் படி 33 வருடம் 4 மாதம் காலதாமதமான தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வழக்கு காலாவாதி தோஷத்தால் பாத்திக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

7. சுப்பிரமணியன் கிரையம் சொத்து சர்வே எண் 283/1பி என்றாலும்,புதியவன் சொத்து சர்வே எண் 283/1எப் என்றாலும் இருவரும் அனுபவ வசதிக்காக தங்களுக்குள் பிரித்து கொண்டார்கள் என்றாலும் அதன் அடிப்படையில் தனி பட்டா ஏற்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. மேற்படி சம்மந்தமாக மாவட்ட வருவாய் அலுவலரிடம் பட்டா பாஸ் புக் சட்டப்படி என்.ஆர்.2/2015–ல் முடிவாகிவிட்டது என்றால் சரியல்ல. 18.082013 லேயே என் மீதும், என் வகையறா மீதும் திருநெல்வேலி காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் அ ந்த நடவடிக்கைகளை காலதாமதப்படுத்துவதற்காக தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. நானோ எனது தகப்பனாரோ தபசில் சொத்தில் விவசாயம் செய்ததில்லை என்றால்சரியல்ல. வா.சா.ஆ.4 மோசடியாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்சரியலல். எனது தந்தைக்கே தாவா சொத்தில் உரிமையில்லாத நிலையில் வா.சா.ஆ.1 ஆவணத்தை எனது தந்தை ஏற்படுத்த இயலாது என்றால்சரியல்ல. வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனது இடம் எனக்கு வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. நீதிமன்றத்தல் ஆஜராகியிருந்தால் 3ம் பிரதிவாதியை அடையாளம் காட்ட முடியுமா என்றால் பார்த்ததில்லை. 1ம் பிரதிவாதிக்கு இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது 81 வயது என்றால் நான் அவரை பார்த்ததில்லை.பிரதிவாதிகள் கதவு எண் 10/96, 10/97 இருப்பதாக சொல்லியுள்ளார்கள் அது பற்றி எனக்கு தெரியாது. 2017 ஆண்டே தாவா

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL060007902018/truecopy/order-3.pdf

சொத்தை ரூ.2,73,750/–க்கு 3ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் எனவே வழக்கை தவறாக கணக்கீட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளது தவறு என்றால்சரியல்ல.

10. புதியவனுக்கு சேர்வைகாரன் வாரிசு என்பது உண்மையல்ல என்றாலும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.வா.சா.ஆ.2 ஆவணத்தில் தாவா சொத்து காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ல் உள்ள சர்வே எண்கள் திருத்தப்பட்டுள்ளது என்றாலும் சில சர்வே எண்கள் தெரியவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.,2ல் 20 சொத்துக்களுக்கான சர்வே எண்கள் காட்டப்பட்டுள்ளது என்றால்சரிதான். அது தொடர்பான ஆவணம் தாக்கல் செய்யாமல் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

11. 3ம் பிரதிவாதியின் உரிமை மற்றும் அனுபவத்திலுள்ள தாவொ சாத்தை பொறுத்து நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரயில். வழக்கு தாக்கல் செய்ய தெரிவித்துள்ள காரணம் உண்மையல்ல என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் வழக்கிறஞர் அறிவிப்போ காவல் நிலையத்தில் புகாரோ தாக்கல் செய்யவில்லை என்றால்சரிதான். வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL060007902018/truecopy/order-3.pdf

www.ecourtsindia.com